
வெளியீடு எண். 135.

# திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்கள்



அப்பர்.

தருமபுர ஆதீனம்.



வீரட்டேசுவரர் ஆலய முன்தோற்றம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உ௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண். 135.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதின

உ௫-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதினம்

1947.

பிரதிகள் 300.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.
29—5—47. Q. H. No. T. E. 68. 72.

உ

குருபாதம்

# முன்னுரை

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நக்ஷத்திரத் திருநாட்களில் திருப்பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல இம்மாதத்தில் 30—5—47 அன்று ஆதீனத்தைச் சார்ந்த திருக்குறுக்கை ஸ்ரீவீரட்டேசுவரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து இவ் வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகிறது. யாவரும் பெற்றுப் பாராயணம் செய்து இறையருளால் எல்லா நலன்களும் அடைந்து உய்வார்களாக.

உ

குருபாதம்

# தலச்சிறப்பு

திருக்குறுக்கை என்னும் இத்தலம் சோழ நாட்டுக் காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்திற் குட்பட்டது. தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூகாவில் உள்ளது. மாயூரத்திற்கு வடக்கே யுள்ள நீடூர் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 5 கல் தொலைவில் விளங்குகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த இருதிருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. தலவரலாற்றுச் சுருக்கம் தேவஸ்தானத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது.

## தலப்பெயர்கள்.

கடுக்காமரம்தலவிருட்சமாதலின் கடுவனம் எனவும், இறைவர் அம்மையாரைப் பிரிந்து யோகஞ்செய்த இடமாதலின் யோகீசபுரம்

எனவும், காமனைத் தகித்த இடமாதலின் காமதகனபுரம் எனவும், இலக்குமியினது கம்பத் (நடுக்கத்)தைப் போக்கியதாகலின் கம்பகரபுரம் எனவும், தீர்க்கவாகுமுனிவரது கரங்கள் நீளாது குறுகினமையால் "குறுக்கை" எனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

## மூர்த்திகள்.

இறைவர் திருநாமம் வீரட்டேசுவரர். அம்மையார் திருநாமம் ஞானம்பிகை. சம்ஹார மூர்த்தியின் திருநாமம் (உற்சவர்); யோகீஸ்வரர். அம்மையார் பூர்ணி யம்மையார். இது காமதகனபுரம் ஆதலின் காமன் அவன் மனைவி இரதி ஆகிய யிருவர்களுக்கும் உற்சவ மூர்த்தங்கள் இருக்கின்றன.

## தலப்பெருமை.

அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. இத் தலத்துச் சபை காமனங்கநாசனிசபை எனப் பெயர் பெறும். சம்புவினோதசபை எனவும்

வழங்கும். இறைவன் உமையம்மையாரைப் பிரிந்து யோகத்தமர்ந்த பெருமை மிக்கது. குறுங்கைவிநாயகர் எழுந்தருளி அன்பர்கட்கு வேண்டும் பேறுகளைக் கொடுத்து அருள் பாலிப்பது.

கரும்பு வில்லினையுடைய காமனை எரித்து, இரதி போற்ற நெடுமால் இரப்ப மீட்டும் உயிர்கொடுத்தருளியது; இலக்குமிக்கு உள தான நடுக்கத்தை நீக்கியது; அசுரர்களை வெற்றிகொள்வதற்காக முருகக்கடவுள் வந்து பூசித்துச் சூலாயுதம் பெற்றது; இராகவன் வழிபட்டுப் பிதிர்க்கடன் ஆற்றியது; தீர்க்க வாகு முனிவர்க்குக் கரம் குறுகச்செய்தது; வாணாசுரனுக்கு அஞ்சிய மகாவிஷ்ணுவுக்கு அபயமளித்தது; திருமுடி கண்டேன் எனப் பொய் கூறிய பிரமனுக்கு இறைவன் படைப் புத்தொழிலை நீக்கப் பிரமன் அஞ்சி வழி பட்டுப் பூசித்து, இழந்த படைப்புத்தொழிலை மீட்டும் பெற்றது; சோழநாடு முழுதும் நெல்

விளையவேண்டும் என்று விரும்பிய சயத்துவசனுக்கு அவன் விருப்பின்படியே அருள்பாலித்தது; அகத்திய முனிவரால் பூசிக்கப்பெற்றது; காளியும் துர்க்கையும் காவல் புரிவது; இரதியும் காமனும் வழிபட்டது; ஆகிய பற்பல பெருமைகளையுடையன.

**காமன்:**— உலக காரணராகிய இறைவன் தக்கன் யாகத்தை அழித்து இங்கு வந்து யோகத்திலிருந்தனன். தக்கயாகத்தில் கலந்து கொண்ட தேவர்கள் அசுரர்களது துன்பத்திற்கு ஆளானார்கள். வருத்தமுற்றதேவர்கள் குருவிடம்சென்று முறையிட அவர் "யோகத்திலிருக்கும் பெருமான் உமையை மணந்து அறுமுகனைப்பெற்றால் துன்பம்நீங்கும்" எனக் கூறினர். அவ்வாறே தேவராதியோர்களது வேண்டுகோட்படி மன்மதன் ஒருவாறு துணிந்து இங்குவந்தான். திருமுன் நின்று வில்வளைத்தான். கருணாமூர்த்தியாகிய இறைவன் "நாம விழித்தால் இவன் இறந்துபடக்

கூடும்" என்றுகருதி மேல்புறம் திரும்பினார்* அங்கும் காமன்வந்து நின்றான். பெருமான் நெற்றிக்கண்ணைத்திறந்தார். காமன் நடுங்கிச் சிறிது தெனபுறம் ஓடினான். நுதல்விழிச் செந்தீ நேருறப்பட்டது. உடம்பு சாம்ப லாகியது.

இது இவ்வாறாகவே விஷ்ணுவும் தேவர் களுடன் வந்து வணங்கினார்கள்; ஏற்பட்ட துன்பத்தை எடுத்துரைத்தார்கள். இறை வனும் அம்மையை மணந்தனர். விஷ்ணு இறைவன் ஆணைப்படி இங்குவந்து, கணவனை இழந்து தவம்புரிந்து கொண்டிருந்த இரதி யுடன் காமன் எரிந்த இடத்தை அடைந்து சாம்பலை ஓருருவாக அமைத்து ஆலயத்தின் முன்னுள்ள சூலதீர்த்தத்தைமொண்டு அதன் மேல் தெளித்தனர். காமன் உயிர்பெற்றனன். பெருமானை வழிபட்டுச்சென்றான்.

---

* கீழ்புறமும் மேல்புறமும நந்தி பலிபீடம் அமைந்திருப்பதை இன்றும் காணலாம்.

**தீர்க்கவாகுமுனிவர்:—** தலயாத்திரைசெய்து கொண்டு வந்த இம் முனிவர் இங்கு வந்து இறைவனை வழிபட்டு வழக்கம்போல் அபி டேகம் செய்வதற்குக் கங்கைநீர் வேண்டிக் கைகளை ஆகாயத்தில் நீட்டினார். கைகள் குறுகின. "நியதி தவறியதே; யான்செய்த அபசாரம் யாது" என வருந்தினார். விக்கினத் தை நீக்கும் விக்னேசுவரரை வணங்கினார். அவர் 'என்கையைப்பார்; இதுவும் அப்படியே' எனக் கூறினர். முனிவர் யாதுசெய்வார் உயிர்விடுவதே நலமென எண்ணினார். தலை யைக் கல்லில் மோதினார். அடியவர் துன்பத் திற்கு அண்ணலாகிய பெருமான் சம்மதிப் பரோ? அப்பொழுது ஒருதிருக்கை கல்லிடை எழுந்து தடுத்தது. முனிவர் அம்மையப்பர் கோலத்தை ஆகாயத்தில் கண்டார். வீழ்ந்து பணிந்தார். "அரசர் வாழ்வும் அமரர் இருக் கையும் வேண்டேன்; நின் திருவடிக்கலப்பே வேண்டுவன்" என விண்ணப்பித்தார். அத் துடன் "அடியேன்கைகளைக் குறுக்கியதற்குக்

காரணத்தையும் தெரித்தருள வேண்டும்'' என்றனர். அதற்கு இறைவன் நமது சூலத்தால் உண்டாக்கப்பட்ட இச் சூலதீர்த்தம் மிகச் சிறந்தது; நீ அது உணராமல் கங்கை நீர் சிறந்ததென்று கருதிக் கையை நீட்டினுய்; அதனுல் கை குறுகிற்று'' என்று விடை பகர்ந்தனர். அதுமுதல் குறுங்கைமுனி எனப் பெயர்பெற்ருர்; விநாயகரும் குறுங்கை விநாயகர் ஆயினுர்; தலமும் குறுங்கை—குறுக்கை எனப் பெயர்பெற்றது

## திருப்பதிகப் பொழிப்புரை

### முதற் பதிகம்.

**1.** ஆதிகாலத்தில் திருவடிகளுக்கு அருச்சனை ஆற்றி வேதம் ஓதும் நாவினையுடைய பிரமதேவனுகிய அச்சிருட்டி கர்த்தா, முறைப்படி உணர்ந்துகொண்ட இறைவர்; சோதிக்கண் சோதியாய்த் தோன்றி சொற்

பதங்கடந்துநின்றார். பல பூக்களையும் முறுக் குடைத்துத் தேனுண்டு வண்டுகள்பாடுகின்ற வளப்பமிக்க சோலை சூழ்ந்த குறுக்கை யென்னும் தலத்துள் எழுந்தருளியிருக்கும் வீரட் டனார் என்னும் திருநாமத்தையுடைய நம் மிறைவர்.

2. திருமேனி முழுதும் திருநீறு பூசிக் கொண்டு தினந்தோறும் தவறாது ஆகம விதிப்படி ஆற்றுநீர் கொண்டு அபிடேகித்து அருச்சித்து வழிபடும் மார்க்கண்டரென்னும் அந்தணரை வாழ்நாள் உலர்ந்தது என்ன பற்றி உயிர்கொடு போவான்வந்த தரும ராசனின் ஏவலாளனாகிய கூற்றுவனை நையு மாறு தண்டித்து ஓலமிட்டு ஓடுமாறு செய் திட்டவர் குறுக்கை வீரட்டனார்.

3. மிகவும் தழைத்து நிழல்செய்யும் ஆத்தி மரத்தின் கீழ் நிலையியற் பொருளாகிய பூமிக் கண் மணலையே சிவலிங்கமாகக் குவித்து, தன்னை இன்மொழிகளால் அழைத்து அதில்

அமரும்படிசெய்து, பசுக்களின் பாலைக்கறந்து அபிடேகஞ் செய்யப் பார்த்திருந்த தாதை வந்து அப் பூசைக்கு இடையூறுசெய்ய தந்தை யென்று கருதாது பெரிய கொடிய மழுவினால் தாளிரண்டையும் துணித்து வீழ்த்திய அருஞ் செயல்கண்டு அச்சண்டிக்குக் குழைத்த அமுதமாகிய சிவஞானத்தைக் கொடுத்தருளி ணர் குறுக்கை வீரட்டனர்.

4. பண்டைநாள் திருவானைக்கா வென்னும் தலத்து வாய்நூல்கொண்டு பந்தல் வேய்ந்து நிழல்செய்த காரணத்தால் இறந்த அச்சிலந் தியைக் கோச்செங்கண்ணன் என்னும் திரு நாமத்தோடும் பொன்னியாறு பாயும் சோழ நாட்டு சோழ அரசர்களது குலத்தில் அவ தரிக்கும்படி அருள்புரிந்தார் குறுக்கை வீரட்டனர்.

5. மிகப்பெரியமகரமீனையும் மராமரங்கள் ஏழையும் எறிந்து துளைத்து வலிகாட்டிய திருமால் ஆயிரம் செந்தாமரை மலர்கொண்டு

அருச்சனை செய்யுங்கால் ஒரு பூக்குறைய அப்பூசனை முற்றுவிக்க தனது இரு கண்களில் ஒன்றைப் பெயர்க்கக்கண்டு, யாவராலும் புகழ்ந்துபேசப்படும் சக்ராயுதத்தை ஈந்தார், குறுக்கை வீரட்டனார்.

6. கஞ்சி விரும்பி உண்ணும் சாக்கியனார், உள்ளன்போடு தவறாது சிவலிங்கங் கண்டு கல்லெறிந்து வந்த அருஞ் செயலுக்கு நெல்லின் சோறு உண்ணாது அமுதுண்டு நிலைபெறும் பெரிய விண்ணுலகத்தை ஆளுமாறு அருள் செய்வித்தும், நள்ளிருளில் அங்கியை ஏந்தி கூத்து இயற்றிக் கொல்லி என்னும் பண்மிகக பாடலையும் விரும்பிப் பாடினார் குறுக்கை வீரட்டனார்.

7. காப்பமைந்த வில்லும் அம்பும் ஒருகையேந்தி, இறைச்சிப்பாரம் மற்றொருகையேந்தி நின்று, தோல்கொண்டு இயற்றிய பெரிய தனது காற் செருப்பால் சென்னிக்கண் முன் அணிவித்த மலரும் பச்சிலையும் நீக்கித் தூய

வாய்க்கலச நீராட்டியும் வழிபட்டுவருங்கால் அன்பினை எடுத்துக்காட்ட தனது சிவந்த பெருங்கண்களில் குருதிநீர் ஒழுகும்படிசெய்ய அதுகண்டு பொறுது தன் கண் ஒன்றை மிண்டி அப்பிய கண்ணைப்பநாயனுரது கண்ணைத் தன் கண்ணில்லிருத்தி பொருத்திக் கொண்டனர். குறுக்கை வீரட்டனுர்.

8. மிக்க சிறப்பினையுடைய வேதங்கள் பலவும் பூசித்து ஏத்தும் திருமறைக்காடென்னும் தல ஆலயத்து, சுடர்விட்டு நீண்டு எரிகின்ற தீபம், கரியநிறத்து எலியினது மூக்கிற்கதுவ, பொராது துள்ள, அக்காரணத்தால் திரி தூண்டப்பட்டு ஒளி நீண்டு எரியும செயல்கண்டு, கடல்சூழ்ந்த இம்மண்ணுலகும் விண்முதலாம் நீண்ட பல் உலகும் மற்றும் பலவும் அரசாளுமாறு குறைவறக் கொடுத்து அருள்புரிந்தார். குறுக்கை வீரட்டனுர்.

9. தெய்வப் பெண்ணுகிய உமாதேவியை ஒருபாகத்து அடக்கிக்கொண்ட ஆதிமூர்த்தி

யும்,வணங்குவார்களது துன்பத்தைப்போக்கு கின்றவரும் மிக்க அரிய தவத்தையுடைய கணம்புல்ல நாயனுருக்கு அருள் செய்தும் மிக்க காதலுடையராய்த் தன்னை மருது வழி படும் அடியார்களுக்குச் சிறப்பினதாய் எண் குணங்களையும் கொடுத்து அருளும்புரிவர் குறுக்கை வீரட்டனூர்.

*10.* அழகிய கயிலைமலையை எடுத்த இரா வணனைச் சினந்து ஒருவிரலால் ஊன்ற, பொறுது அலறி வீழ்ந்து மீண்டு தெளிந்து கைநரம்பால் வீணைசெய்து சாமவேத கீதம் பாடக்கேட்டு இரங்கி அவனுக்கு வெற்றி மிக்க வாளும் வாழ்நாளும் கொடுத்து அருள் புரிந்தார் குறுக்கை வீரட்டனூர்.

## இரண்டாம் பதிகம்.

*1.* முன்னொருவைகல் இம்மண் பரப்பை கடல் கொளவரும் பிரளயத்து திருமாலும் பிரமதேவனும், தலைவராகிய நம் இறைவனை

மறந்து, தாம் தாம் பெரியம் என்று கலாம் விளைத்து வாது செய்து நிற்க, அவ்விருவரும் அடியும் முடியும் தேடிக் கண்டுகொள்ள இயலாதவாறு அண்டமுகடும் பாதலமும் ஊடுருவ அனற்பிழம்பாய்த் தோன்றிய நம் சிவபெருமானே, கோபமிக்க வில்வேடராய்த் தோன்றி வழிபாடுமிக்க அருச்சுனருக்கு, மிக்க பரிசுத்தமான மந்திரவடிவாகிய பாசு பதமும் நீண்ட கொடியுடைத் தேரும் கொடுத்து அருள்புரிந்தார்; குறுக்கை என்னுந் தலத்துமேவிய வீரட்டனுர் என்னும் நம் இறைவர்.

2. திருமால் பிரமன் முதலிய எல்லாத் தேவதொகுதிகளும் "யாங்கள் அடைக்கலம், ஆயினேம் எம்பெருமானே! சோத்தமே!" என்று சொல்லிச்சொல்லித் தொழுது வணங்கிச் சூழ்ந்துவர, மிக்க சிறப்பினதாய அஷ்டமிக்கு முன்னுகவரும் பிரதமை முதல் சப்தமி ஈருக உள்ள ஏழுதினங்களும், செந்தீமுழங்க

நட்டமாடிப் பெருங்கூத்தராய் வீதிக்கண் உலாப்போந்தார் குறுக்கை வீரட்டனுர் என்பதாம். ஊழிக்காலத்து இவ் வேழு தினங் களும் பூதபௌதிகங்களும நிலைமாறுகின்ற காலமென்பர். இவற்றை, "விண்ணைமடங்க விரிநீர் பரந்து வெற்புக் கரப்ப, மண்ணை மடங்கவரும ஒருநாள் அன்று தோன்றுவன் அதள் அமபலவன்". என்னும திருக்கோவை யாராலும தெளிக. சோத்தம் என்பது முற் றுணர்வில்லாத இழிந்தோர் செய்யும் அஞ்சலி.

## வரலாற்றுக் குறிப்புக்கள்

**1. பிரமன்:—** இவன் யானே பெரியவன் என்று தன் தந்தையு (விஷ்ணுவு)டன் வாது செய்து கலகமிடுங்காலத்தில் இறைவன் இரு வருக்கும் நடுவே அனல்வடிவாய்த் தோன்றி ஞன். கண்ட இருவரும் சபதம் செய்து கொண்டு பிரமன் முடியினைத் தேடுதற்குப் புறப்பட்டான். மாயன் கீழ்நோக்கினுன்.

மேற்சென்ற பிரமன் களைப்புற்று இடையே கண்ட தாழையினைத் துணைகொண்டு பொய் புகல இறைவர் 'படைப்புத் தொழிலையிழக்க' எனச் சபித்தார். பிரமன் அஞ்சி உய்வுபெறு தற்கு அவராணைப்படியே இத்தலத்து வந்து வழிபட்டு இழந்த தன்தொழிலை மீட்டும் பெற்றான்.

**2. மார்க்கண்டர்:–** இவர் தமக்குப் பதினாறு வயதென அறுதியிட்டிருப்பதை உணர்ந்தார். சிவபூசை செய்தலே அதற்குபாயம் என உட்கொண்டு, நியமந்தவறாது பூசித்து வந்தார் கால அளவு முடிந்தவுடன் இயமன் குறுகினான். அச்சமயத்தில் சிவபூசை செய்துகொண்டிருந்தார். கண்டு இறைவனைக் கட்டியணைத்தார். இயமன் வீசிய பாசம் இறைவன்மீதும் பட்டது. உடனே இறைவன் சிவலிங்கத்தினிடையே சூலத்துடன் தோன்றி இயமனை உதைத்துக் கொன்று, இவருக்கு 'என்றும்

பதினாறு வயதுடன் விளங்குக' எனத் திரு வருள்செய்தார்.

**3. சண்டேசர்:-** ஆயர்கள் பசுக்களை அடித்து வருத்துதலைக்கண்டு தாமேமேய்க்கத்தொடங்கினார். அன்றுமுதல் ஆற்றின் கரையில் மணலினால் இலிங்கந் தாபித்து ஆவின்பாலைக் கறந்து அபிஷேகித்துவந்தார். உண்மை யுணராத தந்தை சிவபூசைக்கு இடையூறு செய்ய, இவர் பக்கத்திலிருந்தகோலைஎடுத்து வீசினார். அது மழுவாகிக் காலைவெட்டியது. இறைவன் காட்சியளித்துத் தம் பொருட்டுப் பிதாவின் காலை வெட்டியதால் தாமே தந்தையாகி, சண்டேசுர பதம அளித்தனர்.

**4. கோச்செங்கணான்:-** முற்பிறவியில் சிலந்தி உருவம் பெற்றிருந்தார். சிலந்தி ஆனைக்காவில் இலிங்கத்தின் மீது சருகு முதலியன உதிரா வண்ணம் வாய்நூலினாலே மேற்கட்டி அமைத்தது. அதனை அநுசிதம் எனக்கருதிய வெள்ளானை அதனை அழித்து வழிபட்டு வந்தது.

அது கண்ட சிலந்திக்குக் கோபம் வந்தது; யானையினது துதிக்கையில் புகுந்து கடிக்க, யானை கையை மோதிக்கொண்டு விழுந்து இறந்தது; மோதியதால் சிலந்தியும் இறந்தது. அச்சிலந்தியே மறுபிறப்பில் (நாயன்மார்களில் ஒருவராகிய) கோச்செங்கணான்.

5. **திருமால்:–** இவர் இறைவனை நாடோறும் ஆயிரம் பூக்கொண்டு அருச்சிப்பது வழக்கம். திருவருளால் ஒருநாள் ஒன்று குறைந்தது. உடனே தனதுகண்ணைப்பறித்துச் சாத்தினார். அன்பின் பெருக்கைக் கண்ட இறைவர் சக்கரப்படையை அளித்தார்.

6. **சாக்கியர்:—** எந் நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் சங்கரன்தாள் மறவாமையே பொருள் எனக்கருதித் தான் கொண்ட பௌத்த மதத்திலிருந்தே சிவ பெருமான் மகிமையை யுணர்ந்து நாடோறும் செய்வது தெரியாமல் கல் எறிந்து வழிபட்டு வந்தார். ஒருநாள் மறந்து உணவு அருந்தும்

போது நினைவுக்குவந்தது; ஓடிவந்து அன்புடனே கல்லை எடுத்து எறிந்தார். இறைவன் காட்சிகொடுத்து அருள்பாலித்தார்.

7. **கண்ணப்பர்:—** வேடர் குலத்தவர். ஒருநாள் வேட்டைக்குச் செல்லுங்கால மலைமீது இலிங்க உருவினைக்கண்டார். அன்புமயமானார். மாமிசத்தை நிவேதித்தார். ஒருநாள் இறைவரது கண்ணினின்றும் குருதிவரக் கண்டார். நடுங்கினார். கையிலுள்ள அம்பினால் தமதுகண்ணைப்பிடுங்கி இறைவருக்குச் சாத்தினார். மற்றொருகண்ணிலும் அவ்வாறே வர தமது மற்றொரு கண்ணைப் பிடுங்க முற்பட்டார் உடனே இறைவன் காட்சியளித்து தமது வலப்பக்கத்திலே இருத்தினார்.

8. **மாவலி:—** முற்பிறவியில் எலி. வேதவனத்தில் இறைவரது ஆலயத்திலுள்ள நெய் விளக்குத் தூண்டுவாரின்றி மங்கும் சமயம் நல்வினைப்பயனால் விளக்கிலுள்ள நெய்யை உண்ணவந்தது. மூக்கைச்சுட்டது. மூக்கை

அசைக்க, அது காரணமாக விளக்குத் தூண்டப்பட்டு ஒளி பிரகாசித்தது. இச்சிவப் பணியின் பயனால் மறுபிறவியில் மாவலிச் சக்ரவர்த்தியாகப் பிறந்து மூவுலகையும் அரசாட்சி செய்தது.

**9. கணம்புல்லர்:—** நாடோறும்சிதம்பரத்திலுள்ள திருப்புலீச்சரத்தில் திருவிளக்கு இட்டுப் பணிபுரிந்து வந்தார். திருவருளால் ஒருநாள் பணி முட்டுப்பட்டது. காரணம் அறிந்துகொண்டு வந்த கணம்புல் விலைப்படாமையே. என்செய்வார்! அப்புல்லினையே எரித்தார். அதுவும் போதவில்லை. தமது முடியை எரித்து ஒளிசெய்தார். இறைவன் காட்சி அளித்துத் திருவருளபாலித்தார்.

**10. இராவணன்:–** இறைவன் பெருமையையுணராது, தனது போக்குக்குத் தடைசெய்ததால் அவர் எழுந்தருளியிருக்குங் கயிலை மலையைப் பெயர்க்கத் தொடங்கினான், அது கண்ட இறைவர் தமது திருவடியிலுள்ள ஒரு

விரலை அழுத்த இராவணன் பாரம் பொறுக்காமல் அலறி வீழ்ந்து, தனது கையிலுள்ள நரம்பை எடுத்து ஒலியுண்டாக்கி வேதகீதங்கள் பாடினன். கருணைவள்ளலாகிய பரமன் மனமிரங்கி வாழ்நாளும் வெற்றிவாளும் அளித்து அருள்பாலித்தார்.

கண்ணுதல் யோகி ருப்பக்
காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி
மெலிந்தனமெ ஒரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ
எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப்
பேரின்ப மளித்த தோரார்.

--அருணந்திசிவம்.



உ

சிவமயம

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

## பண்—திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

ஆதியிற் பிரம னார்தாம் அர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவ ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக் குறுக்கைவீ ரட்ட னாரே. க

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநா ளற்ற தென்று தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. உ

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௩

சிலந்தியும் ஆனைக் காவிற் றிருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௪

ஏறுட னேழ டர்த்தா னெண்ணியா யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை அர்ச்சித்தா னடியிணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோ ராழி யீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௫

கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறு ணாமே நீள்விசும் பாள வைத்தார்
எல்லியாங் கெரிகை யேந்தி எழில்திகழ் நட்ட மாடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௬

காப்பதோர் வில்லும் அம்புங் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௭

நிறைமறைக் காடு தன்னில் நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவா னுலக மெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. ௮

அணங்குமை பாக மாக அடக்கிய ஆதி மூர்த்தி
வணங்குவா ரிடர்கள் தீர்க்கும் மருந்துநல் லருந்த வத்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து காதலா மடியார்க் கென்றுங்
குணங்களைக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. ௯

எடுத்தன னெழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலா லூன்ற அலறிப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந ரம்பால் வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாணாள் குறுக்கைவீ ரட்ட னாரே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

நெடியமால் பிரம னோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியுங் காணா ரருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேட ராகித் தாயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர்கொ டுத்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. க

ஆத்தமாம் அயனு மாலும் அன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தமெம் பெருமானென்று தொழுதுதோத் திரங்கள்சொல்லத்
தீர்த்தமாம் அட்ட மீமுன் சீருடை யேழு நாளுங்
கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. உ



திருச்சிற்றம்பலம்.

# அட்டவீரட்டம்

பூமன் சிரங்கண்டி; அந்தகன் கோவல்;
புரம் அதிகை;
மாமன் பறியல்; சலந்தரன் விற்குடி;
மா வழுவூர்;
காமன் குறுக்கை; யமன்கடவூர்; இந்தக்
காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன்
சேவகமே.